# பதவி வெற்றிடங்கள்

# வவுனியாப் பல்கலைக்கழகம், இலங்கை

வவுனியாப் பல்கலைக்கழகமானது பின்வரும் நிரந்தர பதவிகளுக்காக தகுதியான இலங்கை பிரஜைகளிடமிருந்து விண்ணப்பங்களை கோருகின்றது.

1. பாதுகாப்புப் பரிசோதகர் தரம் (II)
2. சாரதி தரம் (III)
3. விருந்தினர் விடுதிக் காப்பாளர் மற்றும் சமையற்காரர் தரம் (III)
4. ஆய்வுகூட உதவியாளர் தரம் (III)

**தகைமைகள்**

**1. பாதுகாப்புப் பரிசோதகர் தரம் (II)**

i. (a) இரண்டு (02) தடவைகளுக்கு மேற்படாத அமர்வுகளில் க.பொ.த சாதாரண தரப் பரீட்சையில் சிங்களம்/ தமிழ் மொழி அல்லது இலக்கியம் மற்றும் எண்கணிதம்/ வணிக எண்கணிதம்/ கணிதம் ஆகிய பாடங்கள் உள்ளடங்களாக ஐந்து (05) பாடங்களில் திறமைச்சித்தி பெற்றிருத்தல்.

அல்லது

(b) உயர்கல்வி நிறுவன அமைப்பில் குறைந்தது ஐந்து (05) வருடங்கள் திருப்திகரமான சேவையை ஆற்றியிருப்பதுடன் மூன்று (03) தடவைகளுக்கு மேற்படாத அமர்வுகளில் க.பொ.த சாதாரண தரப் பரீட்சையில் சிங்களம்/ தமிழ் மொழி அல்லது இலக்கியம் மற்றும் எண்கணிதம்/ வணிக எண்கணிதம்/ கணிதம் ஆகிய பாடங்கள் உள்ளடங்களாக ஆறு (06) பாடங்களில் திறமைச்சித்தி பெற்றிருத்தல்.

மற்றும்

ii. காவல்துறை அல்லது ஆயுதப்படைச் சேவை அல்லது உயர்கல்வி நிறுவன அமைப்பின் பாதுகாப்புச் சேவை அல்லது ஏதாவது ஒரு அங்கீகரிக்கப்பட்ட பாதுகாப்பு நிறுவன சேவையில் குறைந்தது ஐந்து (05) வருடங்கள் திருப்திகரமான சேவையை வழங்கியிருத்தல்.

iii. விளையாட்டுச் செயற்பாடுகளில் முனைப்புடன் பங்குபற்றியிருத்தல்.

iv. உயரம்: குறைந்தது ஐந்து (05) அடி நான்கு (04) அங்குலம்

மார்புச் சுற்றளவு: குறைந்தது 34 அங்குலம் (இயல்பான நிலையில்)

**2. சாரதி தரம் (III)**

i. இரண்டு (02) தடவைகளுக்கு மேற்படாத அமர்வுகளில் க.பொ.த சாதாரண தரப் பரீட்சையில் இரண்டு (02) பாடங்களிலாவது திறமைச்சித்தி உள்ளடங்களாக ஆறு (06) பாடங்களில் சித்தி பெற்றிருத்தல்.

மற்றும்

ii. கனரக வாகனங்களை ஓட்டுவதற்கு மோட்டார் போக்குவரத்து ஆணையாளர் நாயகத்தால் வழங்கப்பட்ட அனுமதிப்பத்திரத்தைக் கொண்டிருப்பதுடன் சாரதி அனுமதிப்பத்திரம் பெற்றுக்கொண்ட பின் குறைந்தது மூன்று (03) ஆண்டுகள் சாரதியாக அனுபவம் பெற்றிருத்தல்.

3. **விருந்தினர் விடுதிக் காப்பாளர் மற்றும் சமையற்காரர் தரம் (III) மற்றும்**

4. **ஆய்வுகூட உதவியாளர் தரம் (III)**

i. இரண்டு (02) தடவைகளுக்கு மேற்படாத அமர்வுகளில் க.பொ.த சாதாரண தரப் பரீட்சையில் இரண்டு (02) பாடங்களிலாவது திறமைச்சித்தி உள்ளடங்களாக ஆறு (06) பாடங்களில் சித்தி பெற்றிருப்பதுடன் மேலும் ஒவ்வொரு பதவிக்கும் பொருத்தமான, மூன்றாம் நிலை மற்றும் தொழிற்கல்வி ஆணையத்தால் ஏற்றுக்கொள்ளப்பட்ட தொழில்நுட்ப/ தொழிற்கல்வி நிறுவனத்தால் வழங்கப்பட்ட தேசிய தொழிற்கல்வித் தகுதிகள் (NVQ) நிலை 2 அல்லது 3ஐ விடக் குறையாத சான்றிதழை அத்துறையில் பெற்றிருக்கவேண்டும்.

அல்லது

ii. இரண்டு (02) தடவைகளுக்கு மேற்படாத அமர்வுகளில் க.பொ.த சாதாரண தரப் பரீட்சையில் இரண்டு (02) பாடங்களிலாவது திறமைச்சித்தி உள்ளடங்களாக ஆறு (06) பாடங்களில் சித்தி பெற்றிருப்பதுடன் மேலும் குறைந்தது ஒரு (01) வருடம் அத்துறையில் தொழிற்றுறை அனுபவம் பெற்றிருத்தல்.

**குறிப்பு:**

**தகுதிக்கான நிபந்தனைகள்**

1. இலங்கைப் பிரஜையாக இருத்தல்வேண்டும்.
2. விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் வயது, 18 வயதிற்குக் குறையாமலும் 45 வயதிற்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.
3. உடல் மற்றும் மனரீதியில் பதவிக்குப் பொருத்தமானவராகவும் பதவியின் பொறுப்புக்களைச் சிறப்பாக நிறைவேற்றுபவராகவும், நாட்டின் எந்தப் பகுதியிலும் கடமையாற்றத் தயாராகவும் இருத்தல் வேண்டும்.
4. சிறந்த நற்பண்பு மற்றும் ஒழுக்கம் உடையவராக இருத்தல்வேண்டும்.

**சம்பளம் மற்றும் பிற சலுகைகள்**

| பதவி | சம்பளக்குறியீடு | சம்பள அளவு |
|---|---|---|
| பாதுகாப்புப் பரிசோதகர் தரம் (II) | U – MN 1 (III) | ரூ.49,475 - 17 × 540 - 58,655 மாதாந்தம் |
| சாரதி தரம் (III) | U – PL 3 (III) | ரூ.48,005 - 16 × 490 - 55,845 மாதாந்தம் |
| விருந்தினர் விடுதிக் காப்பாளர் மற்றும் சமையற்காரர் தரம் (III) மற்றும் ஆய்வுகூட உதவியாளர் தரம் (III) | U – PL 2 (III) | ரூ.44,575 - 16 × 490 - 52,415 மாதாந்தம் |

சம்பளம் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் சுற்றறிக்கை எண் 02/2025 இன் அடிப்படையில் வழங்கப்படும்.

- வாழ்வாதாரக் கொடுப்பனவு: ரூ 17,800 மாதாந்தம்
- மாதாந்த இழப்பீட்டுக் கொடுப்பனவு : 36% - ரூ 330 மாதாந்தம்

**சட்டபூர்வ சலுகைகள்**

- பல்கலைக்கழக ஓய்வூதியத் திட்டத்தின் அங்கத்தவராதல், பல்கலைக்கழகச் சகாய நிதி, பணிக்கொடைக் கொடுப்பனவுகள் மற்றும் ஊழியர் நம்பிக்கை நிதி என்பனவற்றை பெற்றுக் கொள்ளல்.

- இலவச மருத்துவ சேவைகள்

**ஆட்சேர்ப்பு முறை**

- பாதுகாப்புப் பரிசோதகர் தரம் (II) - நேர்முகத் தேர்வு மூலம்

- சாரதி தரம் (III), விருந்தினர் விடுதிக் காப்பாளர் மற்றும் சமையற்காரர் தரம் (III) மற்றும் ஆய்வுகூட உதவியாளர் தரம் (III) - கட்டமைக்கப்பட்ட நேர்முகத்தேர்வு மற்றும் தொழிற்றிறன் பரிசோதனை மூலம்

**விண்ணப்பங்கள் சமர்ப்பிக்கும் இறுதித்திகதி**: 21.11.2025 அன்று அல்லது அதற்கு முதல் எமக்குக் கிடைக்குமாறு அனுப்பி வைக்கப்படல் வேண்டும்.

விண்ணப்பங்கள் கல்வித்தகுதிகள் மற்றும் தொழில்முறைத்தகுதிகளின் சான்றிதழ்களின் பிரதிகள் (மதிப்பெண் சான்றிதழ்கள் இணைக்கப்பட வேண்டும்) மற்றும் சேவைச் சான்றிதழ்களுடன் **பிரதிப் பதிவாளர், தாபனக்கிளை, வவுனியாப் பல்கலைக்கழகம், பம்பைமடு** என்ற முகவரிக்கு **பதிவுத் தபாலின்** ஊடாக அனுப்பி வைக்கப்படல் வேண்டும்.

மேலும் பதிவுத் தபாலின் ரசீது மற்றும் விண்ணப்பத்தின் ஸ்கேன் செய்யப்பட்ட பிரதியையும் PDF வடிவில் **recruitments@vau.ac.lk** என்ற மின்னஞ்சல் முகவரிக்கு இறுதித்திகதி அன்று அல்லது அதற்கு முதல் கிடைக்குமாறு அனுப்பி வைக்கப்படல் வேண்டும்.

**விண்ணப்பப்படிவம்** பல்கலைக்கழக வலைத்தளத்தளமான http://www.vau.ac.lk இல் கிடைக்கின்றது.

பதிவிறக்கம் செய்யப்பட்ட விண்ணப்பப்படிவத்துடன் ரூ 100.00 பணம் செலுத்திய வங்கி ரசீது இணைக்கப்பட வேண்டும். அந்தத்தொகை **வங்கி கணக்கு இல: 2364602, இலங்கை வங்கியில் நிதியாளர், வவுனியாப் பல்கலைக்கழகம்** என்ற பெயரில் செலுத்தப்பட வேண்டும்.

ஒருவர் ஒன்றுக்கு மேற்பட்ட பதவிகளுக்கு விண்ணப்பிக்க நேர்ந்தால், ஒவ்வொரு பதவிக்கும் தனித்தனியான விண்ணப்பப்படிவமும், தனித்தனியான வங்கி ரசீதும் இணைக்கப்பட வேண்டும்.

உயர்கல்வி நிறுவன அமைப்பு, அரசாங்கத் திணைக்களங்கள்/ நிறுவனங்கள் மற்றும் சட்டபூர்வ அமைப்புக்களில் பணியாற்றுவோர் தங்களது நிறுவனத் தலைவர்களுக்கூடாக விண்ணப்பப்படிவங்களை அனுப்பி வைக்க வேண்டும். எனினும் இறுதித்திகதி அன்று அல்லது அதற்கு முதல் கிடைக்குமாறு விண்ணப்பப்படிவத்தின் ஒரு நகலை முன் கூட்டியே அனுப்பி வைக்கலாம். நிறுவனத் தலைவர்களுக்கூடாக அனுப்பி வைக்கப்படாத விண்ணப்பப்படிவங்கள் நேர்முகத்தேர்வுக்கு பரிசீலிக்கப்படமாட்டாது.

தெளிவற்ற, முழுமையாக நிரப்பப்படாத மற்றும் தாமதமாக கிடைக்கப்பெறும் விண்ணப்பப்படிவங்கள் முன்னறிவித்தலின்றி நிராகரிக்கப்படும். தெரிவுசெய்யப்பட்ட விண்ணப்பத்தாரர்கள் மட்டுமே நேர்முகத்தேர்வுக்கு அழைக்கப்படுவார்கள்.

**பதிவாளர்**

**வவுனியாப் பல்கலைக்கழகம்**

**02.11.2025.**